THIRU K. S. KOTHANDARAMIAH: There is a **great** demand for land development banks everywhere. The demand is greater in backward areas in districts like Dharmapuri. May I know from the Hon. Minister whether he will give special consideration to Dharmapuri district in the matter of opening land development banks?

மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார்: தர்மபுரி மாவட்டத்தில் தல்லி, கிழமங்கலம், சூளகிரி, பர்கூர் வேப்பனப்பள்ளி, காவேரிப் பட்டணம், பென்னகரம், நல்லம்பள்ளி, மூரப்பூர் பாப்பிரெட்டி பட்டி ஆகிய இடங்களில் திறக்கப்பட இருக்கின்றன.

திரு. அ. ஆறுமுகம்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது 6 வட்டாரங்களைத் தவிர மற்ற எல்லா ஒன்றியங்களிலும் அமைக்கப்படும் என்று சொன்னார்கள், அந்த ஆறு வட்டாரங்கள் என்ன, என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அந்த வட்டாரங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கின்றன என்று வருத்தத் தோடு சொல்ல விரும்புகிறேன். அங்குள்ள நிலவள வங்கிகள் நட்டத் தில் போகின்றன. ஆகவே இந்த ஆண்டில் இல்லாது பின்னால் அவற்றை எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டிருக் கிறது.

திரு. ஏ. க. துரைசாமி: வடாற்காடு மாவட்டத்தில் 16 இடங் களில் நிலவள வங்கிகள் ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அதில் குடியாத்தம் இடம்பெற்றிருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: குடியாத்தத்தில் ஏற்கனவே ஒரு நிலவள வங்கியிருந்து, முற்காலத்திலிருந்தே அது செயல்பட்டு வருகிறது.

திரு. ந. முத்துவேல்: திண்டிவனம் நகராட்சியில் உள்ள நிலவள வங்கியை ஒலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றி அமைக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இது நிலவள வங்கி மனைவள வங்கியில்லை ஆகையால் பெரும்பாலும் ஊராட்சி ஒன்றியப் பகுதியில்தான் அமைக்கப்பட்டு வருகின்றன.

வேலூரில் உள்ள பழம் பதனிடும் தொழிற்சாலை

*** 12 வினா—திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வேலூரில் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்பட்ட பழம் பதனிடும் தொழிற்சாலை தற்போது செயல்படுகிறதா?

(இ) இல்லை எனில், காரணம் என்ன?

1971 ஜூன் 23]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) இல்லை; (இ) இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே இருக்கிறது. ஆரம்ப கட்டத்தைத் தாண்டவில்லை.

திரு. நா. வீராசாமி: வேலூரில் இருக்கக்கூடிய அந்தப் பழம் பதனிடும் தொழிற்சாலைக்குக் கடந்த ஆண்டு போதுமான தக்காளிப் பழம், மாம்பழம் ஆகியவை சரியான முறையில் கிடைக்காத காரணத்தினல் பல லட்சக்கணக்கான ரூபாய் மூலதனம் போட்டும் அது வேலைசெய்யாமல் இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருள்கள் கிடைக்க தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இந்தத் தொழிற்சாலை சரியான முறையில் நடைபெறுவதற்குப் போதுமான மாம்பழம், தக்காளிப்பழம் கிடைக்கவில்லை என்பது காரணம் அல்ல. வேலூரில் தக்காளி கிடைக்கிறது, மாம்பழம் கிடைக்கிறது. ஆனல் தக்காளி ரசம், மாம்பழ ரசம் பிழிந்து புட்டியில் அடைத்து விற்பனைக்கு அனுப்பும்போது அவை சரியான முறையில் விற்பனையாகவில்லை. நம் நாட்டு மக்கள் தக்காளி, மாம்பழம் ஆகியவற்றைப் பழமாகவே தான் வாங்கி அருந்த விரும்புகிருர்கள். ஆகவே விற்பனையாகக் கூடிய பொருள்களைப் பதனிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ்: கன்னியாகுமரி ஜில்லாவில் அன்னசிப் பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்க ஆக்க வேலைகள் செய்யப் பட்டிருக்கின்றனவா? அப்படியானல் அதிகமாக அன்னசிப் பழம் உற்பத்தி செய்யப்படுகிற குலசேகரத்தில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இது கன்னியாகுமரி மாவட்டத்தை பொறுத்தது எனக்கு மிக நன்ருகத் தெரியும். அன்னசிப் பழத்தை டின்னில் அடைத்தால் நல்ல விற்பனையாகும். ஆகவே, கற்குளம்—விளவங்கோடு கூட்டுறவுச் சங்கத்திற்கு இதற்காக ஏறத்தாழ 2 லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்திருக்கிறேன். அந்த மாவட்டத்தில் விரைவில் அந்தத் தொழிற்சாலையைத் தொடங்கினல் நான் நன்றி உள்ளவனக இருப்பேன்.

திரு. தி. பொன்னுமலை: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் தக்காளி, திராட்சை போன்ற பழங்கள் ஏராளமாகப் பயிரிடப்படுகின்றன. சில நேரங்களில் அவை விற்பனையாகமல் பழம் அழுகிவிட்டது என்று எருக்கு குழியில் கொட்டும்படியாக நேரிடுகிறது. ஆகவே, அந்த மாவட்டத்தில் இந்தப் பழங்களைப் பதனிடம் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏற்கனவே சொன்ன படி தக்காளிப் பழ ரசத்தை டின்னில் அடைத்தால் விற்பனை ஆவது இல்லை. ஆகையால்தான் அன்னாசிப் பழத்தைப் பதனிட்டு டின்னில் அடைக்கிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். இது வெளி நாட்டுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தக்காளிப் பழ ரசத் தைத் தயாரிக்க முயற்சி செய்வதில் லாபம் இல்லை.

திரு: ஆர். பொன்னப்ப நாடார் : அமைச்சர் அவர்கள் கூறிய படி கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கிற கல்குளம் விளவங்கோடு கூட்டுறவுச் சங்கத் தலைவர் உடனடியாக இந்த வேலையைத் துவங்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனார் : இந்த கற்குளம்— விளவங்கோடு கூட்டுறவு சங்கத் தலைவர் ,எதிர்கட்சித் தலைவருக்கு மிகவும் நெருக்கமாக உள்ளவர். நான் பணத்தை அனுப்ப வேண்டி யவன். ரூ. 2 லட்சம் சாங்ஷன் செய்து அனுப்பியிருக்கிறேன். ஆணை யிடுகின்ற சக்தி எனக்கில்லை. எதிர்க் கட்சித் தலைவர் சொல்லுக்கு மதிப்பு இருக்கும். ஆகவே அவர் சொல்லி இந்தத் தொழிற் சாலையை ஆரம்பிக்கச் செய்தால் பல பேர்களுக்கு வேலை கிடைக்கவும் நல்ல வாய்ப்பாக இருக்கும்.

திரு. பெ. மலைச்சாமி : கூட்டுறவுத்துறை பல பொருள்களை உற்பத்தி செய்து வருகிறது. ஆகஸ்டு 30-ம் தேதியில் இருந்து மது பானங்களையும் தயாரிக்க கூட்டுறவுத்துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மதுபானங்களைக் கூட்டுறவுத் துறையில் மகாராஷ்டிர மாநிலத்தில் தயாரித்து வருகிறார்கள். டில்லி போயிருந்தபோதுகூட நான் சொன்னேன், மது பானங்களைத்தவிர, தமிழகம் மற்றப் பொருள்களைக் கூட்டுறவுத் துறையில் தயாரித்து வருவதில் முன் நிற்கும் என்று. மதுபானங் களையும் மகாராஷ்டிரம் தயாரிப்பதற்கு என் பாராட்டு, மதுபானங்களைத்தவிர மற்றவற்றைத் தயாரிப்பதில் தமிழக கூட்டுறவுத்துறை என்றைக்கும் முன்னணியில் நிற்க முயற்சிக்கும், என்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 26, 27 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

Employees' State Insurance Scheme

* 28 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the supply of medicines to an employee (and his family) covered by the Employees' State Insurance Scheme is limited to a sum of Rs. 50 per annum; and

(*b*) if so, whether this Government would take up the matter with the Central Government for enhancement of this amount?